அவர்கள் மீண்டும் மறுபரிசிலனை செய்து வருகின்ற ஆண்டி லாவது அந்த ஏழை எளிய மக்களுடைய வாட்டத்தைப் போக்கு கின்ற வகையில் அவர்களுடைய இந்த குறையை நீக்குவதற்கு புதிய கட்டிடம் படுக்கை வசதியோடு ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே தெரிவித்தேன். மற்ற இடங்களில் எல்லாம் 32 படுக்கைகளும் அதற்கு கீழே தான் இருக்கின்றன. ஆனால் இங்கே 56 படுக்கைகள் இருக்கின்றன. எனவேதான் கூடுதலாக தேவையில்லை என்று கருதினோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்துக்கு இணங்க அதை ஆய்வு செய்து நிதிப் பிரச்சினை மற்ற எல்லாப் பிரச்சினை களையும் மனதில் வைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 519, திரு. எ. ஏகாம்பர ரெட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

519—

பள்ளிப்பட்டில் வட்டாரத் தலைமை மருத்துவமனை அமைத்தல்.

* 4304—திரு. எ. ஏகாம்பர ரெட்டி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டில் வட்டாரத் தலைமை மருத்துவமனை (Taluk Headquarters Hospital) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை (நிலை) எண். 1550. சுகாதாரம், நாள் 11—12—1991-ல் 15 வட்டங்களில் வட்டார மருத்துவ மனைகளை தரம் உயர்த்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் பள்ளிப்பட்டும் இணைந்துள்ளது.

VAYMAIYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 9]

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தாலுக்கா தலைமை மருத்துவ மனைக்கு ஆணை வெளியிடப்பட்டும் இதுவரை அது செயல் படுத்தப்படவில்லை. அதை எப்போது செயல்படுத்த முடியும்? அதற்கு என்ன காரணம்? தேவையான அளவுக்கு நிலப் பரப்பு மொத்தமாகக் கொடுத்தும் இது நாள் வரை அதை ஸ்டார்ட் செய்யாமல் இருக்கிறது. அது எப்போது ஸ்டார்ட் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணை வெளியிடப்பட்ட உடனேயே அதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிட முடியாது. அரசு ஆணை வெளியிடப்பட்ட பின்பு அதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளும் செய்வதற்கு ஒரு 3 மாதம், 4 மாத காலம் ஆகிவிடுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களு டைய உணர்வுகளை மனதில் வைத்து விரைவாக அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தாலுக்காவில் 1978—80 ஆம் ஆண்டுக்குள்ளாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சித் காலத்திலே பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்ததை கவர்ன்மெண்டு டிஸ்பென்சரியாக அப்கிரேடு செய்யப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த அரசு டிஸ்பென்சரியை உடனே அடிஷனல் பிரைமரி எல்த் சென்டராக டீ-கிரேடு செய்யப்பட்டது திரும்ப இந்த ஆட்சி—மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி—வந்த பிறகு அது என்னுடைய கோரிக்கையின் மீது அரசாங்க தாலுக்கா தலைமை மருத்துவ மனையாக அப்-கிரேடு செய்யப் பட்டது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிப்பட்டு தாலுக்கா 'மோஸ்ட் பேக்வர்டு தாலுக்கா' என்ற காரணத்தால் அதை உடனடியாகத் துவக்க முடியும். துவக்கப்படும் நேரத்திலே குறைந்தபட்சம் தாலுக்கா தலைமை மருத்துவமனையில் 32 படுக்கைகள் உள்ள 'மினிமைஸ்டு ஸ்டிரென்த்' கொண்டதாக இருப்பதால் அதை 32 படுக்கைகளுக்குக் குறைவாக இல்லாத வகையில், அதை 32 படுக்கைகள் கொண்டதாக அரசு நிர்மாணிக்க உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவமனைகளில் 32 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று அரசு கொள்கை ரீதியாக

முடிவு எடுத்து இருக்கிறது. ஆனால் அதை எல்லாம் ஒரே ஆண்டில் செய்து விட முடியாது. படிப்படியாகத்தான் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் அதைப் பற்றி தனியாக ஆய்வு செய்து தேவையான படுக்கைகள் அங்கே கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 520. திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு போக்குவரத்துத்துறை, அமைச்சர்.

520—

லாரிகளை மதுரை மாநகருக்கு வெளியே நிறுத்த நடவடிக்கை

* 3250—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாநகரத்தில் பகல் நேரங்களில் லாரி போக்குவரத்து அதிகமாக உள்ளதால், பள்ளி செல்லும் மாணவர்கள், அரசு ஊழியர்கள், நிறுவனங்களில் பணிபுரிவோர், மருத்துவமனை செல்வோர் குறித்த நேரத்தில் தங்கள் பணியிடங்களுக்குச் செல்ல இயலாமல் போவதோடு, அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க லாரிகளை மதுரை மாநகருக்கு வெளியே நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில், பகல் நேரங்களில் லாரிகள் போக்குவரத்து அதிகமாக இருக்கின்றன. மதுரை நகரம் மிகப் பழமையான நகரமாக இருக்கின்ற காரணத்தால் சாலைகள் மிகவும் குறுகியதாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே குறிப்பாகப் பள்ளி, செல்லும் மாணவர்கள், அரசு அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதைத் தடுக்கும் வண்ணம் சென்னையிலுள்ளது போல் தாம்பரத்தைத் தாண்டி நகருக்கு

TRUTH ALONE TRIUMPHS